தினகரன்

## கொளுத்தும் வெயிலால் உற்பத்தி பாதிப்பு கொத்தமல்லி இலை விலை உயர்வு

பதிவு செய்த நேரம்:2012-05-20 12:45:19

திருப்பூர், : பல்லடம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளான தேத்தனுீர், ஜல்லிப்பட்டி, மந்திரிபாளையம், மாணிக்காபுரம், கே.கிருஷ்ணாபுரம், ஊஞ்சபாளையம், பொங்கலுீர் உள்ளிட்ட பகுதிகளில் கொத்தமல்லி இலை சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இங்கு பயிர் செய்யப்படும் கொத்தமல்லி இலைகள் திருப்பூர் தினசரி மார்கெட் மற்றும் உழவர் சந்தை ஆகிய இடங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கொத்தமல்லி இலைகள் பெரும்பாலும் நிழல் பகுதிகளில் தான் பயிர் செய்யப்படுகிறது. நிழல் உள்ள பகுதிகளில் மட்டும் தான் கொத்த மல்லி இலைகள் நன்கு வளரும். இதனால் தான் விவசாயிகள் தென்னை மர நிழல் மற்றும் பந்தல் போட்டு பயிர் செய்கிறார்கள்.

இந்நிலையில் தற்போது கொளுத்தும் வெயில் காரணமாக கொத்தமல்லி இலைகளின் உற்பத்தி பெரும் அளவில் குறைந்துவிட்டது. இதனால் கடந்த வாரத்தில் ஒரு கட்டு ரூ.2க்கு விற்று வந்த கொத்தமல்லி இலைகள் தற்போது ரூ.6&க்கு விற்கப்படுகிறது. இதனால் தற்போது கொத்தமல்லி வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

## உழவர் பெருவிழாவில் 703 விவசாயிகளுக்கு ரூ.41.34 லட்சம் இடுபொருள்

பதிவு செய்த நேரம்:2012-05-19 12:27:57

திருச்சி: உழவர் பெருவிழாவில் 703 விவசாயிகளுக்கு ரூ.41.34 லட்சத்தில் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாக வேளாண் இணை இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் வேளாண் துறையில் பல் வேறு பிரிவுகள் சார்பில் கடந்த ஏப்ரல் 13 முதல் நேற்று முன்தினம் (17ம் தேதி) வரை உழவர் பெரு விழா நடத்தப்பட்டது. கலெக்டர் ஜெயஸ்ரீ, மாவ ட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் ஆகி யோர் தலைமையில் வேளா ண்மை துணை இயக்குனர் கள் சபாநடேசன், சந்திரசேகரன், பொன்னுசாமி, தோட்டக்கலை துணை இயக்குனர் ஞானசேகரன் ஆகியோர் கொண்ட குழு வினர் விழாவை நடத்தி னர்.

மாவட்டத்தின் 14 வட்டாரங்களில் நகர் பகுதி நீங் கலாக 470 வருவாய் கிராமங்களில் உழவர்

பெரு விழா நடந்தது. இதில் 1,15,249 விவசாயிகள் கலந்து கொண்டனர். 13,070 விவசாயிகளுக்கு ஒருங்கிணை ந்த கையேடு வழங்கப்பட் டது.
இது குறித்து திருச்சி வேளாண் இணை இயக்குனர் சேகர் கூறுகையில், உழவர் பெருவிழாவில் விதை நேர்த்தி, எலி ஒழிப்பு, மண்மாதிரி சேகரிப்பு உள் ளிட்ட 2,318 செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. 20,361 விவசாயிகளிடம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளது. வேளாண் மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் 703 விவசாயிகளுக்கு ரூ.24.74 லட்சம் வேளாண் இடுபொருட்கள், ரூ.16.60 லட்சம் கருவிகள் மானியத் தில் வழங்கப்பட்டுள்ளது. 14,502 கால்நடைகளுக்கு தடுப்பூசி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்றார்.

## சேத்துப்பட்டு விவசாயிகளுக்கு விதை பொருட்கள் ஒன்றியக்குழு தலைவர் வழங்கினார்

பதிவு செய்த நேரம்:2012-05-19 12:24:25

சேத்துப்பட்டு, : சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் நடந்த உழவர் பெருவிழா நிறைவு விழாவில் விவசாயிகளுக்கு விதை பொருட்களை ஒன்றியக்குழு தலைவர் பத்மாவதி சின்னக்குழந்தை வழங்கினார்.
சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 13ம் தேதி முதல் உழவர் பெருவிழா தொடங்கி, கிராமங்கள் தோறும் நடந்தது. இதன்நிறைவு விழா நேற்று முன்தினம் நரசிங்கபுரம், ஓதலவாடி, சோத்துக்கண்ணி ஆகிய கிராமங்களில் நடைபெற்றது. ஒன்றியக்குழு தலைவர் பத்மாவதிசின்னக்குழந்தை தலைமை தாங்கினார். இதில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது நிலங்களின் மண்வளத்தை பரிசோதனை செய்து கொண்டனர். மேலும் சேத்துப்பட்டு வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைகள் மற்றும் இடுபொருட்கள், உரங்கள் ஆகியவற்றை எவ்வாறு பயன்படுத்துவது, குறைந்த செலவில் நிறைந்த பயனை பெறுவது, தோட்டக்கலை துறை மூலம் காய்கறி மற்றும் பழத்தோட்டம் அமைப்பது, விவசாயிகளின் துணை தொழிலாக கறவை மாடுகள், ஆடுகள் வளர்ப்பு, கோழிவளர்ப்பு, மீன் வளர்ப்பு குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் வடமலை விரிவாக பேசினார். விழாவில் விவசாயிகளுக்கு விதை பொருட்களை ஒன்றியக்குழு தலைவர் பத்மாவதி சின்னக்குழந்தை வழங்கினார். விழாவையொட்டி கண்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. வேளாண்மை உதவி அலுவலர் சித்ரா, ராஜன், தோட்டக்கலை துறை அலுவலர் பெரியநாயகம், வேளாண் விற்பனை துறை உதவி அலுவலர் பாஸ்கரன், இளநிலை பொறியாளர் மாரியப்பன், அதிமுக பொதுக்குழு உறுப் பினர் சின்னக்குழந்தை, ஒன்றிய பொருளாளர் காளியப்பன், ஒன்றிய பேரவை தலைவர் மணிவண்ணன், குப்பன், நடேசன், சங்கர், ஊராட்சி மன்றதலைவர்

அமுதவல்லி பழனி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண்மை உதவி அலுவலர் குப்புசாமி நன்றி கூறினார்.

### உழவர் பெருவிழாவில் ரூ40 லட்சத்தில் இடுபொருட்கள் வேளாண் அதிகாரி தகவல்

பதிவு செய்த நேரம்:2012-05-19 11:41:59

தேன்கனிக்கோட்டை: உழவர் பெருவிழாவில் கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் ரூ40 லட்சம் மதிப்பில் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாக வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட் டம் கெலமங்கலம் வட்டாரம் பச்சப்பனட்டி கிராமத்தில் உழவர் பெருவிழா நடைபெற்றது. கிருஷ்ணகிரி வேளாண்மைத்துறை இணை இயக்குநர் நாச்சியப்பன் தலைமை தாங்கினார். விழாவில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கி அவர் பேசியதாவது: ஏப்ரல் மாதம் 13ம் தேதி துவங்கி ஒரு மாதமாக நடைபெற்ற உழவர் பெருவிழாவில் 19 ஆயிரம் மண் மாதிரி சேகரித்து விவசாயிகளுக்கு மண் பரிசோதனை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இது வரை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உழவர் பெருவிழாவில் 4 ஆயிரம் விவாசயிகள் பயனடைந்துள்ளனர். 2300 வருவாய் கிராமங்களில் விழா நடைபெற்றுள்ளது. ரூ40 லட்சம் மதிப்பில் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கெலமங்கலம் வட்டார வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் சுப்பையா, தோட்டகலைத்துறை உதவி இயக்குநர் சிதம்பரம், வேளாண்மை பெறியியல் துறை ராமசுப்ரமணியம், கால்நடைத்துறை, பட்டுவளர்ச்சித்துறை அதிகாரிகள் துறை ரீதியாக உள்ள திட்டங்கள் குறித்து விளக்கி பேசினர். ஒன்றிய கவுன்சிலர் ரகு, ஊராட்சி தலைவர் மங்கம்மா கிருஷ்ணப்பா, வேளாண்மை அலுவலர் ஷாகுல் அமீது, தோட்டக்கலை அலுவலர் சுப்பிரமணியம், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### பண்ணைகளில் குளிர்விப்பு முறையை பயன்படுத்த வேண்டும் வானிலை மையம் ஆலோசனை

பதிவு செய்த நேரம்:2012-05-19 12:00:31

நாமக்கல்: பண்ணைகளில் குளிர்விப்பு முறையை பின்பற்ற வேண்டும் என வானிலை ஆலோசனை மையம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வரும் 4 நாட்களுக்கான வானிலை அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் பண்ணையாளர்களுக்கான வானிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் வரும் 4 நாட்களும் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். 4 நாட்களும் மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்றின் வேகம் மணிக்கு 5 கி.மீ வேகத்தில் மேற்கில் இருந்து வீசும். வெப்பநிலை அதிகபட்சம் 102 டிகிரி. குறைந்தபட்சம் 78 டிகிரி. காற்றின் ஈரப்பதம் அதிக அளவு 72 சதவீதம். குறைந்த அளவு 38 சதவீதமாக காணப்படும்.

கோழிகள் வெப்பத்துக்கு பழக்கப்பட்டு இருப்பதால், பாக்கர்ஸ் குளிர்விப்பு முறையை பயன்படுத்துவதாலும் வெப்ப அயற்சியின் தாக்கத்தில் இருந்து ஓரளவிற்கு விடுபட்டுள்ளன. இருந்தாலும் இவ்வார இறுதியில் வெப்ப அளவு உச்சத்தை தொடும் என்பதால் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். காற்றின் வேகம் மாலையில் துவங்க தாமதம் ஆகும் பட்சத்தில் இரவு 7 மணி வரை குளிர்விப்பு முறையை பயன்படுத்த வேண்டும்.

கடந்த வார கோழியின நோய் ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழிகள் பெரும்பாலும் மேல் மூச்சுக்குழல் நோய் மற்றும் வெப்ப அயற்சியால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. எனவே பண்ணையாளர்கள் பண்ணை உயிர் பாதுகாப்பு முறையை கடைபிடிப்பதுடன் கோடை கால பண்ணை பராமரிப்பு முறையை பின்பற்ற வேண்டும்.விவசாயிகளுக்கான வானிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது,

வறட்சியை தாங்கும் தீவன சோளம் தற்போது காணப்படும் சிறுமழையை பயன்படுத்தி மானாவாரி நிலத்தில் 2 அடி இடைவெளியில் பார் அமைத்து பாரின் இருபக்கத்திலும் அரை அடிக்கு இரண்டு விதைகளை ஊன்ற வேண்டும். விதைகள் ஊன்றுவதற்கு ஏக்கருக்கு 2 கிலோ மற்றும் விதையை தூவ ஏக்கருக்கு 4 கிலோ என்ற அளவில் பயன்படுத்த தரமான சிஓஎப்எஸ் 29 ரக விதைகள் வேளாண் அறிவியல் நிலையத்தில் கிடைக்கிறது.இவ்வாறு பண்ணையாளர்கள், விவசாயிகளுக்கான வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது